*கவனிக்க.- 2014.12.05 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1893 - 2014 දෙසැම්බර් මස 12 වැනි සිකුරාදා - 2014.12.12

*1893 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## *பகுதி I : தொகுதி (I) - பொது*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 1136 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நாயகத்தின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1137 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1143 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2015, சனவரி மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2014 இன் இல. 472*

டிஐஆர்எப்/ஆர்ஈசீரீ/259/ஏவை.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்

பின்வரும் பெயருடைய கெடெற் உத்தியோகத்தர் 2014, சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப்படையில் இரண்டாம் லெப்டினன்ட் வரிசைப் பதவியில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அத்திகதி முதல் எந்திரிகள் சேவை அணிக்கு உள்ளிடுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

சி/57267 - கெடெற் உத்தியோகத்தர் உடவத்த கங்கானம்கே றோஷான் சமிந்த உடவத்த

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2014, நவெம்பர் 11.

12-333

---

*2014 இன் இல. 473*

எம்ஓடி /டிஈஎவ்/02/01/ஈஎன்எல்/01/சீடிரீ.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்

பின்வரும் பெயருடைய கெடெற் உத்தியோகத்தர்கள் 2014.06.21 ஆந் திகதி முதல் பின்வரும் அட்டவணையின் பிரகாரம் இலங்கைத் தரைப்படைன் நிரந்தரப்படையில் இரண்டாம் லெப்டினன்ட் வரிசைப் பதவியில் அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும் அத்திகதி முதல் அவரவர் பெயர்களின் முன்னே குறிப்பிட்டிருக்கும் அணிகளுக்கும்/ சிறப்பணிகளுக்கும் உள்ளிடுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

சி/58872 - கெடெற் உத்தியோகத்தர் பமுனு ஆரச்சி பதிரகே டெனேசியன் அபேசிக் பமுனு ஆரச்சி - இலங்கை இலேசாயுத காலாட்படை

சி/58865 - கெடெற் உத்தியோகத்தர் மஹதூர ஷமிர மதுஷான் சேனாரத்ன - இலங்கை எந்திரிகள் அணி

சி/58656 - கெடெற் உத்தியோகத்தர் பட்டிவில கங்கானம்லாகே தினேஷ் லக்மால் பட்டிவில - விஜயபாகு காலாட்படை

சி/58654 - கெடெற் உத்தியோகத்தர் யகுதாகொட திசாநாயக்கலாகே பிரபாத் தனஞ்ஜய சமரநாயக - கெமுனு காவற்படை

சி/58870 - கெடெற் உத்தியோகத்தர் பமுனுவே பராம்பே கெதர மதுஷான் பிரியங்கர பண்டார ரணசிங்க - இலங்கைச் சைகைச் சிறப்பணி

சி/58664 - கெடெற் உத்தியோகத்தர் இடம்கெதர கசுன் சாமர பண்டார - இலங்கை சிங்க அணி

சி/58882 - கெடெற் உத்தியோகத்தர் அடுவேகெதர கல்ஹேவகே டில்ஷான் சாரங்க கன்ஹேவகே - இலங்கை தரைப்படை போர்க்கருவிச் சிறப்பணி

சி/58878 - கெடெற் உத்தியோகத்தர் திசாநாயக முதியான்சேலாகே லக்மால் மதுசங்க பண்டார - இயந்திர காலாட்படை அணி

சி/58874 - கெடெற் உத்தியோகத்தர் லங்காதிகாரி முதியன்சேலாகே மதுசங்க தமித் தயான் வீரதுங்க - இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் அணி

சி/58852 - கெடெற் உத்தியோகத்தர் பத்தேகமகே ஒஷான் ஸ்ரீலக் ரணவீர - இலங்கை தரைப்படை சேவைப் சிறப்பணி

சி/58663 - கெடெற் உத்தியோகத்தர் சிங்கக்குட்டி அச்சி அத்துகோரலலாகே தொன் டிசான் பீரிஸ் - இலங்கை இலேசாயுத காலாட்படை

சி/58851 - கெடெற் உத்தியோகத்தர் கம்மெத லியன அப்புஹாமிலாகே நிஷாந்த புஸ்பகுமார - இலங்கை சிங்க அணி

சி/58892 - கெடெற் உத்தியோகத்தர் ஹெட்டிகமகே றுவன் இந்திக ஹெட்டிகமகே - கஜபா அணி

சி/58873 - கெடெற் உத்தியோகத்தர் வன்னிநாயக முதியன்சேலாகே உபுல் சந்திரகாந்த பண்டார - இலங்கை இராணுவ பொலிசு சேவை சிறப்பணி

சி/58871 - கெடெற் உத்தியோகத்தர் பஹல கபுராலலாகே திலீப மதுஷான் ரூபசிங்க - இலங்கை படைக்கலச் சிறப்பணி

சி/58649 - கெடெற் உத்தியோகத்தர் வஹல்கட கெதர கசுன் பிரபோத ஸ்ரீ பிரேமலால் - விஜயபாகு காலாட்படை

சி/58637 - கெடெற் உத்தியோகத்தர் குமார குணபாலகே ஜனித திலும் டெனியல் - இலங்கைப் பீரங்கிப் படை

சி/58844 - கெடெற் உத்தியோகத்தர் திசாநாயக முதியன்சேலாகே அசங்க பிரியசாந் ரணசிங் - இலங்கை இலேசாயுத காலாட்படை

சி/58651 - கெடெற் உத்தியோகத்தர் ரணித்திர அஷான் சந்திரரத்ன - கஜபா அணி

சி/58846 - கெடெற் உத்தியோகத்தர் ஒஷான் மதுசங்க தந்திரிவத்த - கெமுனு காவற்படை

சி/58522 - கெடெற் உத்தியோகத்தர் யடிநுவர கெதர தீப ஸ்ரீ விக்ரமான்வித - இலங்கை சிங்க அணி

சி/58863 - கெடெற் உத்தியோகத்தர் குமாரகே தரிந்து மாலக குமாரகே - இலங்கை இலேசாயுத காலாட்படை

சி/58861 - கெடெற் உத்தியோகத்தர் கால்லகே எரங்க பிரியசாந்த கால்லகே - விஜயபாகு காலாட்படை

சி/58862 - கெடெற் உத்தியோகத்தர் பெலந்தகே குஷான் தரங்க பெலந்தகே - இலங்கை இலேசாயுத காலாட்படை

சி/58864 - கெடெற் உத்தியோகத்தர் அதிகாரி முதியன்சேலாகே நலிந்த ஜயலத் அதிகாரி - கஜபா அணி

சி/58538 - கெடெற் உத்தியோகத்தர் ஹேவா வலிமுனிகே கயான் சஞ்ஜீவ வலிமுனிகே - கெமுனு காவற்படை

சி/58670 - கெடெற் உத்தியோகத்தர் ஹேவா கங்கானம்கே இரேஷ கருணாசேகர - கஜபா அணி

சி/58884 - கெடெற் உத்தியோகத்தர் முனசிங்க முதியான்சேலாகே கசுன் கங்கநாத் - இலங்கை தரைப்படை போர்க்கருவிச் சிறப்பணி

சி/58881 - கெடெற் உத்தியோகத்தர் விக்கிரமசிங்க சேனாநாயக அப்புஹாமிலாகே ரசிக ஹர்ஷான் சேனாநாயக - இயந்திர காலாட்படை அணி

சி/58845 - கெடெற் உத்தியோகத்தர் நதித கசுன்ஜித் கமகெதர - விஜயபாகு காலாட்படை

சி/ 58857 - கெடெற் உத்தியோகத்தர் பிபிலே முல்லே கெதர ரங்கன சதுர பண்டார - விஜயபாகு காலாட்படை

சி/ 58854 - கெடெற் உத்தியோகத்தர் கோன்கல விஜேசிங்க ஆரச்சிகே புபுது கோசல லங்கேஸ்வர விஜேசிங்க - கெமுனு காவற்படை

சி/58891 - கெடெற் உத்தியோகத்தர் ஹபுஆரச்சிகே உதேஷ் சமீர ஹபுஆரச்சிகே - இலங்கை இலேசாயுத காலாட்படை

சி/ 58876 - கெடெற் உத்தியோகத்தர் ஜயநெத்தி கோரலாகே யோஹான் சுமேத ஜயநெத்தி - கஜபா அணி

சி/ 58667 - கெடெற் உத்தியோகத்தர் கந்தகே நெவும் ஹசரெல் கந்தகே - இலங்கை தபைப்படை சேவைப் சிறப்பணி

சி/ 58860 - கெடெற் உத்தியோகத்தர் ஹேரத் முதியன்சேலாகே பிரசாத் கித்சிறி நுவன் ஹேரத் - கஜபா அணி

சி/ 58883 - கெடெற் உத்தியோகத்தர் ரணவீர ஆரச்சிலாகே அனுஸ்க சதுரங்க ரணவீர - கெமுனு காவற்படை

சி/ 58856 - கெடெற் உத்தியோகத்தர் ஹேவா கொலம்பகே உதயங்க சதுர கொலம்பகே - இலங்கை சிங்க அணி

சி/ 58869 - கெடெற் உத்தியோகத்தர் செனவிரத்ன வாசல முதின்சேலாகே பமோத ருசிரு உதலாகம - இலங்கை எந்திரிகள் அணி

சி/ 58642 - கெடெற் உத்தியோகத்தர் வெத்தசிங்கபே தொன் தனுஷ்க ருவன் குமார டயஸ் - விஜயபாகு காலாட்படை

சி/58886 - கெடெற் உத்தியோகத்தர் ஏகநாயக முதியன்சேலாகே தர்ஷன ஏகநாயக - இலங்கை இலேசாயுத காலாட்படை

சி/ 58868 - கெடெற் உத்தியோகத்தர் அந்தோலிதுர தரிந்து மதுரங்க சில்வா - விஜயபாகு காலாட்படை

சி/58875 - கெடெற் உத்தியோகத்தர் வாசுர கிஹன்த சேனாரத்ன - கெமுனு காவற்படை

சி/ 58853 - கெடெற் உத்தியோகத்தர் வெகுலியன விஸ்வ மதுபாஷன குமார கொகுலியன - கஜபா அணி

சி/58848 - கெடெற் உத்தியோகத்தர் கோனார முதியன்சேலாகே சுபுன் லக்மால் பண்டார - இலங்கை சிங்க அணி

சி/ 58850 - கெடெற் உத்தியோகத்தர் கித்துல் கொடகெ சதேஷ் ஆசிரி கித்துல்கொட - விஜயபாகு காலாட்படை அணி

சி/58847 - கெடெற் உத்தியோகத்தர் கீசர சமிந்த எலபொடகே - இலங்கைத இராணுவ பொலிசு சிறப்பணி

சி/58503 - கெடெற் உத்தியோகத்தர் திசாநாயக முதியன்சேலாகே சஜித் சம்பத் கருணாநாயக - கஜபா அணி

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு.

பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு,
2014, நவெம்பர் 11.

12-334

# அரசாங்க அறிவித்தல்கள்

## யாத்திரைகள் கட்டளைச்சட்டம்

மாத்தளை, அலுவிகார ரஜமஹா விகாரை எசல
யாத்திரிகைக்கான ஒழுங்குவிதிகள்

(175 ஆம் அத்தியாயமான) யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

டபிள்யூ. டீ. ஜே. செனவிரத்ன,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2014, நவெம்பர் 19.

### ஒழுங்குவிதிகள்

1. இவ் ஒழுங்குவிதிகள் 2014 ஆம் ஆண்டின் மாத்தளை, அலுவிகாரை ரஜமஹா விகாரை (எசல யாத்திரிகை) ஒழுங்கு விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ் ஒழுங்குவிதிகளில் மாத்தளை நிருவாக மாவட்டத்திலுள்ள மாத்தளை அலுவிகாரை ரஜமஹா விகாரைக்கான ஒவ்வொரு யாத்திரிகைக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. முகாம் இடப்பரப்பானது மாவட்டச் செயலாளரின் பொதுவான கட்டுப்பாட்டின் கீழும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரின் நேரடி மேற்பார்வையின் கீழும் இருத்தல் வேண்டும். அவர், பொறுப்பகவுள்ள சுகாதார மருத்துவ அலுவலரினாலும் சிரேஷ்ட பொலிஸ் கண்காணிப்பாளரினாலும் உதவப்படுதல் வேண்டும்.

4. யாத்திரிகர் எவரும், விழாவொன்று தொடங்கும் தேதிக்கு முன்னர் ஒரு நாளுக்கு முந்தாமல் முகாம் இடப்பரப்பை வந்தடைதலாகாது. அல்லது விழாவொன்று முடிவடைந்த தேதிக்குப் பின்னர் ஒரு நாளைக்குப் பிந்தி முகாம் இடப்பரப்பில் தங்கியிருத்தலாகாது.

5 (1) மாவட்டச் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் -

(அ) கழுவுதல், குளித்தல், குடித்தல் மற்றும் வீட்டுத் தேவைகளுக்காக நீர் இறைத்தல் என்பவற்றுக்காக யாத்திரிகர்களினால் புறநீங்கலாகப் பயன்படுத்தவதற்கான குறிப்பிட்ட இடங்களைக் குறித்தொதுக்குவதற்கும் ;

(ஆ) ஒவ்வொரு வகுப்பினரான யாத்திரிகர்களும் தங்கியிருப் பதற்கான இடவசதியைக் குறித்தொதுக்குவதற்கும்;

(இ) ஏதேனும் யாத்திகர்கள் குழுவின் பயணத்துக்கான மார்க்கங்களை ஏற்பாடு செய்வதற்கும் ;

(ஈ) யாத்திரிகர்களுக்கான எல்லா உணவுகளினதும் பகிர்ந்தளிப்பை ஒழுங்குபடுத்துவதற்கும் ;

(உ) நோய்வாய்ப்படும் யாத்திரிகர்ளுக்காகத் தனிவேறான இருப்பிடங்களை அமைப்பதற்கும், நோய் பரவுவதனைத் தடுப்பதற்கும், அவர்கள் பிரயாணஞ் செய்யக்கூடிய நிலையில் இல்லாதிரப்பின் அவர்களைத் தடுத்துவைப்பதற்கும் ;

(ஊ) வாகனங்களை நிறுத்திவைப்பதற்கான இடத்தைக் குறித்தொதுக்குவதற்கும்; அத்துடன்

(எ) சாவடிகளையும் உணவகங்களையும் நிறுவுவதற்கான இடத்தைக் குறித்தொதுக்குவதற்கும் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஆளெவரும் (1) ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுள் எவற்றுக்காகவும் மாவட்டச் செயலாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் விடுக்கப் பட்ட ஏதேனும் சட்டமுறையான கட்டளைக்குக் கீழ்ப்படியாதிருத்த லாகாது.

6. மாவட்டச் செயலாளரினால் அல்லது அவரின் அங்கீகாரத்துடன் அந்நோக்கத்துக்காக ஏற்பாடு செய்யப்பட்டவோர் இடத்திற்றவிர, ஆளெவரும், முகாம் இடப்பரப்பினுள் மலசலங்கழித்தலாகாது.

7. ஆளெவரும், மாவட்டச் செயலாளரினால் அல்லது அவரின் அங்கீகாரத்துடன் அந்நோக்கத்துக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஓரிடத்தில் அல்லது ஒரு கொள்கலனிற்றவிர, முகாம் இடரப்பரப்பினுள் ஏதேனும் குப்பையை, அது திரவமானதாக விருப்பினுஞ்சரி திண்மமானதாகவிருப்பினுஞ்சரி, கொட்டுதலா காது.

8. ஆளெவரும், அதற்கென மாவட்டச் செயலாளரிடமிருந்து உரிமமொன்றைப் பெற்றிருந்தாலொழிய, முகாம் இடப்பரப்பினுள் ஏதேனும் போறணையை, காற்றூட்டப்பட்ட பானத் தயாரிப்பிடத்தை, தேனீர் அல்லது கோப்பிக் கடையை உணவகத்தை அல்லது களியாட்ட இடத்தை தாபித்தலோ அல்லது பேணுதலோ ஆகாது. உரிமமானது கட்டணமின்றி வழங்கப்படுதல் வேண்டும்.

9. (i) ஆளெவரும், மாவட்டச் செயலாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் அந்நோக்கத்துக்காக நியமிக்கப்படாத ஏதேனுமிடத்தில், முகாம் இடப்பரப்பினுள் எவ்விரணத்தினதுமான ஏதேனும் வியாபாரப் பொருளை விற்பனைக்காக வெளிக்காட்டி வைத்தலாகாது.

(ii) மாவட்டச் செயலாளரினால் அல்லது அதிகாரமளிக் கப்பட்ட அலுவலகரொருவரினால் அல்லது சுகாதார மருத்துவ அலுவலரினால், அல்லது அவர்கள் இல்லாதிருக்கையில் சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளரி னால் உடனலத்துக்கொவ்வாதெனக் கழிக்கப்பட்டுள்ள ஏதேனும் உணவை ஆளெவரும் விற்பனை செய்தலாகாது.

10. (i) எல்லா உணவகங்களும், தேநீர், மற்றும் கோப்பிக் கடைகளும், துப்பரவான சுகாதாரத்துக்கொத்த நிலைமையில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(ii) விற்பனைக்காக வெளிக்காட்டிவைக்கப்பட்ட எல்லா கேக்குகளும், இனிப்புப் பண்டங்களும், ஏனைய சமைத்த உணவுகளும், தகுந்த முறையில் அமைக்கப்பட்ட ஈ புகா கண்ணாடிப்பெட்டிகளில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(iii) கழிவுத் தேநீர், கோப்பி அல்லது பால் அல்லது உணவு மீதிகள், சமையலிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் அல்லது வேறு குப்பை, தரையில் வீசப்படுதலாகாது. அத்தகைய எல்லாக் குப்பைகளும் இதகனத்துப் பின்னர் குறித்துரைக்கப்பட்ட கொள்கலத்தில் சேகரிக்கப்படுதல் வேண்டுமென்துடன், சுகாதார அதிகாரிகளினால் அகற்றப்படுவதற்காக எல்லா நேரங்களிலும் தயாராக வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

(IV) ஏதேனும் வியாபார அல்லது தொழில் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு கட்டிடமும், கட்டமைப்பும் அல்லது இடமும், கொள்ளளவில் 4 1/2 கன அடிக்குக் குறையாத உலோகத்தினாலான மரத்தினாலான அல்லது பிளாத்தினாலான குப்பைத்தொட்டியொன்று ஏற்பாடு செய்யுப்பட்டதாகவிருத்தல் வேண்டும். அத்தகைய கட்டிடத்தில், கட்டமைப்பில் அல்லது இடத்தில் சேகரிக்கப்பட்ட எல்லாக் குப்பைகளும் அத்தகைய குப்பைத் தொட்டியினுள் போடப்படுதல், வேண்டு மென்பதுடன், அக்குப்பைத் தொட்டியினுள் குப்பை போடப்படும் போது தவிர அல்லது அதிலிருந்து குப்பை எடுக்கப்படும் போது தவிர, எல்லா நேரங்களிலும் ஓர் உலோகத்தினாலான, மரத்தினாலான அல்லது பிளாத்தினாலான மூடியினால் மூடிவைக்கப்படுதலும் வேண்டும்.

11. முகாம் இடப்பரப்பின் துப்பரவானதன்மையைப் பங்கமானமுறையில் பாதிக்கக்கூடிய ஆளெவரும் அத்துடன் ஒரு தொற்று அல்லது தொடு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவாறான ஆளெவரும், முகாம் இடப்பரப்பினுட் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.

12. விழாவொன்றின் போது முகாம் இடப்பரப்பில் ஒரு கொள்ளைநோய் ஏற்படும் பட்சத்தில், முகாம் இடப்பரப்பை விட்டு நீங்கும்படி யாத்திரிகர்களைப் பணித்தலும், யாத்திரிகர்கள் எந்த மார்க்கத்தின் வழியாகவும் எந்தப் போக்குவரத்துச் சாதனத்தின் மூலமும் அல்லது எந்த முறையிலும் புறப்படுதல் வேண்டுமோ அந்த மார்க்கத்தையும் போக்குவரத்துச் சாதனத்தையும் அல்லது முறையையும் குறித்துரைத்தலும் மாவட்டச் செயலாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

13. ஒரு தொற்று அல்லது தொடுநோயினால் பீடிக்கப்படும் முகாம் இடப்பரப்பினுள்ள ான ஆளொவ்வொருவரும், மற்றும் வேறு எவரேனும் ஆள் ஒரு தொற்று அல்லது தொடுநோயினால் பீடிக்கப்பட்டுள்ளரென அறிந்து கொண்டு அத்தகைய வேறு ஆளுடன் வதிகின்ற ஆளொவ்வொருவரும், அவ்விடயத்தை முகாமுக்குப் பொறுப்பாகவுள்ள சுகாதார மருத்துவ அலுவலருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

14. ஆளெவரும், மாவட்டச் செயலாளரின் முன்னனுமதியின்றி, முகாம் இடப்பரப்பினுள் தெருவொன்றாகப் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படுவதற்காக ஒதுக்கிவைக்கப்பட்ட ஏதேனும் காணியைச் சேர்ந்தெல்லையிடும்வகையில், ஏதேனும் சாவடியை அல்லது எவ்வகையினதுமான கட்டிடத்தை நிர்மாணித்தலோ அல்லது ஏதேனும் கட்டிடத்தை விசாலித்தலோ ஆகாது.

15. முகாம் இடப்பரப்பிலிருந்து ஒரு மைல் விட்டத்தினுள் ஆளெவரும் பின்வரும் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துதலாகாது :-

(அ) கேளிக்கை கொண்டாட்டங்களும் நடனமும்;
(ஆ) நாடக மேடைசார் அரங்காட்டுகை ;
(இ) அதிஷ்ட ஆட்டங்களும் லொத்தர்களும் ;
(ஈ) மதுபான விற்பனை ;
(உ) விளம்பர நோக்கங்களுக்காக ஒலிபெருக்கிகளின் பயன்பாடு;
(ஊ) சமய விரோதப் பிரசுரங்களின் விநியோகம் ;
(எ) மரக்கிளைகளை வெட்டிவீழ்த்துதல் ;
(ஏ) சமய வழிபாடுகளுடன் சம்பந்தப்படாத பாட்டுபாடலையும் சங்கீதக் கூட்டங்களையும் ஒழுங்குபடுத்துதல் அல்லது அதில் பங்குபற்றுதல்.

16.(i) ஆளெவரும், பொதுப் பெருவழியில் ஏதேனும் மோட்டார் வாகனத்தை நிறுத்திவைத்தலோ அல்லது நிற்பாட்டி வைத்தலோ ஆகாது. இது அலுவிகாரை மாத்தளை தம்புள்ள A9 வீதியையும் பாடசாலை செல்லும் வழிகளையும் பெருந்தெருவையும் பிரித்வெல முச்சந்தியையும் ;

(ii) அலுவிகார ரஜமஹா விகாரை அதிகாரிகளுக்கு அல்லது ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்துக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள் தவிர்ந்த மோட்டார் வாகனமெதுவும், அலுவிகாரை ரஜமஹா விகாரையின் பிரதான நுழைவாயிலினூடாக வளவுகளினுட் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படுதலாகாது;

(iii) மோட்டார் வாகனமெதுவும், "மலுவ" இடப்பரப்புகளில் நிற்பாட்டிவைக்கப்படுவதற்கு அல்லது நிறுத்தி வைக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படுதலாகாது;

(iv) பொறுப்பாகவுள்ள பொலிசார், மாவட்டச் செயலாளரினால் பெயர்குறிக்கப்பட்ட தரிப்பிடங்களுக்கண் மையில் அறிவித்தற் பலகைகளை இடுதல் வேண்டும்;

(v) சாரதிகள், யாத்திரிகைக் காலப்பகுதியின் போது கடமையிலுள்ள பொலிஸ் அலுவலர்களினால் விடுக்கப்படும் பணிப்புகளுக்கு அல்லது கொடுக்கப்படும் சைகைகளுக்குக் கீழ்ப்படிதல் வேண்டும்.

17. ஆளெவரும், முகாம் இடப்பரப்பினுள், மனித பாவனைக்காக ஏதேனும் விலங்கை அறுத்தலோ அல்லது கொல்லுதலோ ஆகாது.

18. ஆளெவரும், சிரேட்ட பொலிசுக் கண்காணிப்பாளரின் அனுமதியின்றி, முகாம் இடப்பரப்பினுள் அல்லது அத்தகைய இடப்பரப்பின் எல்லைகளிலிருந்து ஒரு மைல் விட்டத்தினுள் எவையேனும் வாணவேடிக்கை அல்லது சுடுபடைக்கலங்களை வெளிப்படுத்தலாகாது.

19. இவ்வொழுங்கு விதிகளில் -

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, இவ்வொழுங்கு விதிகளின் நோக்கத்துக்காக மாவட்டச் செயலாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் என்று பொருளாகும்;

"முகாம் இடப்பரப்பு" என்பது, இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பு என்று பொருளாகும்;

"மாவட்டச் செயலாளர்" என்பது, மாத்தளை மாவட்டச் செயலகத்தின் மாவட்டச் செயலாளர் என்று பொருளாகும்.

"சுகாதார மருத்துவ அலுவலர்" என்பது, மாத்தளை சுகாதார மருத்துவ அலுவலர் என்று பொருளாகும்;

"மோட்டார் வாகனம்" என்பது, (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன்

"சிரேட்ட பொலிசு கண்காணிப்பாளர்" என்பது, மாத்தளை சிரேட்ட பொலிசு கண்காணிப்பாளர் என்று பொருளாகும்.

**அட்டவணை**

மத்திய மாகாணத்திலுள்ள மாத்தளை மாவட்டம், மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவு, கம்பஹாசியபத்து கோறளையிலுள்ள அலுவிகார கிராம அலுவலர் பிரிவில் அலுவிகார இடபரப்பு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு -

| | | |
|---|---|---|
| வடக்கு | : | ரணவிருகம; |
| கிழக்கு | : | அலுவிகாரகம பாலுகம, சமந்தாவ, திக்கிரிய கம; |
| தெற்கு | : | அலுவிகாரகம சேர் ரிச்சர்ட் அலுவிகார மாவத்தையிலிருந்து பிவித்துறு மாவத்தை ; |
| மேற்கு | : | அலுவிகாரையின் ஒரு பிரிவு, சரணங்கர மாவத்தை, திருகோணமலை வீதி, பீதிதவெல, அலுவிகார 1, 2 ஜனபத எல்லைக்கு இடையிலுள்ள காணி பிரதேசம். |

12-299

---

**யாத்திரிகள் கட்டளைச்சட்டம்**

(175 ஆம் அத்தியாயமான) யாத்திரிகள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

டபிள்யூ. டீ. ஜே. செனவிரத்ன,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2014, நவெம்பர் 19.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ் ஒழுங்குவிதிகள் 2014 வெஹெரஹேன பூர்வாராம புரான ரஜமகா விகாரையின் றுகுனு உதுவப் பெரஹரா விதிகள் என எடுத்துக்காட்டப்படும்.

2. இவ் ஒழுங்குவிதிகளில் -

"வாடிப் பிரதேசம்" என்பது இதற்கான அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடப்பரப்பு எனப் பொருள்படும்.

"மாவட்ட செயலாளர்" என்பது கண்டி நிர்வாக மாவட்டத்தின் "மாவட்டச் செயலாளர்" எனப் பொருள்படுவதுடன் 4 ஆம் ஒழுங்கு

விதியின் கீழ் அவரால் அதிகாரம் வழங்கப்பட்டவரான எவரேனும் அலுவலரையும் உள்ளடக்கும்.

"மருத்துவ அலுவலர்" என்பது வாடிப் பிரதேசத்திற்குப் பொறுப்பாக உள்ள சுகாதார மருத்துவ அலுவலர் என்று பொருள்படும்.

"யாத்திரிகர்" என்பது வாடிப் பிரதேசத்திற்குச் செல்லும் எவரேனும் ஆள் எனப் பொருள்படும்.

"பொலிஸ் அலுவலர்" என்பது, வாடிப் பிரதேசத்திற்குப் பொறுப்பாகவுள்ள எவரேனும் கிராம அலுவலரையும் உள்ளடக்கும், அத்துடன் "பொதுச் சுகாதார பரிசோதகர்" என்பது வாடிப் பிரதேசத்திற்குப் பொறுப்பாகவுள்ள பொதுச் சுகாதார பரிசோதகர் எனப் பொருள்படும்.

3. இவ்வொழுங்குவிதிகள் மாத்தறை நிர்வாக மாவட்டத்தின் வெஹெரஹேன பூர்வாராம புராண ரஜமகா விகாரையின் உதுவப் மகா பெரஹரா உற்சவத்திற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

4. மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர் இவ் ஒழுங்குவிதியின் கீழ் தமக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவத்தைப் பிரயோகிப்பதற்கும் தம் மீது உரிய முறையில் சுமத்தப்பட்டுள்ள கடமையை நிறைவேற்றுவதற்கும் அரசாங்க உத்தியோகத்தர் எவருக்கும் அதிகாரம் வழங்குவதற்கும் தத்துவமுடையவராதல் வேண்டும்.

5. (1) வாடிப் பிரதேசத்திற்குள் அல்லது வாடிப் பிரதேசத்திற்கு வெளியே அல்லது வாடிப் பிரதேசத்திற்குள்ளே வாகனப் போக்குவரத்து அல்லது நடைகாரர் போக்குவரத்தையும் ஒழுங்கு படுத்த மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர் தத்துவமுடைய வராதல் வேண்டும்.

(2) இவ் ஒழுங்கு விதியின் 1 ஆவது பந்தியின் கீழ் தமக்களிக் கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்தலின் போது மாவட்டச் செயலாளரினால் எவரேனும் பொலிஸ் அலுவலருக்கு விடுக் கப்பட்டுள்ள எந்த அறிவுறுத்தல்களையும் அனுசரிக்கும் முகமாக அத்தகைய அலுவலரினால் விடுவிக்கப்பட்ட சட்ட முறையான கட்டளை எதனையும் ஆள் எவரும் மீறி நடத்தல் ஆகாது.

6. மாவட்டச் செயலாளரின் எழுத்திலான அனுமதியுடனின்றி ஆள் எவரும் கால்நடையையோ வேறேதும் மிருகத்தையோ வாடிப் பிரதேசத்திற்குள் கொண்டு செல்லலாகாது. எவ்வாறாயினும் 7 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வண்டிகளையும் மாடுகளையும் நிறுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வண்டிகளையும் மாடுகளையும் செலுத்திச் செல்வது தொடர்பாக, இவ் ஒழுங்கு விதி ஏற்புடையதாகாது.

7. (1) வாடிப் பிரதேசத்தினுள் பின்வரும் இடங்களை ஒதுக்குவதற்கு அல்லது ஏற்பாடு செய்வதற்கு மாவட்டச் செயலாளர் தத்துவமுடையவராதல் வேண்டும் :-

(அ) பஸ்களையும் பிற மோட்டார் வாகனங்களையும் நிறுத்து வதற்கான இடங்கள் ;

(ஆ) வண்டிகளையும் மாடுகளையும் நிறுத்தி வைப்பதற்கான இடங்கள் ;

(இ) ஒவ்வொரு யாத்திரிகர் தொகுதிக்கும் இருப்பாட்சி செய் வதற்கான தனித்தனி இடங்கள் ;

(ஈ) சுகவீனமுறும் யாத்திரிகர்கள் தங்குவதற்கான இடங்கள் ;

(உ) பிச்சை மற்றும் தானம் கேட்பவருக்கான இடங்கள் ;

(ஊ) விற்பனைக்காக குறிப்பிட்டவொரு பொருளை காட்சிக்கு வைப்பதற்கான இடங்கள் ;

(எ) பல்வேறுபட்ட காரியங்களுக்காக சாவடிகளை அமைப்பதற் கான இடங்கள் ;

(ஏ) கழுவுதல் நிமித்தம் யாத்திரிகள் பயன்படுத்தும் குளங்கள், கிணறுகள், நீர் நிலைகள் மற்றும் அதுபோன்ற வசதிகளை அளிக்கும் வேறு இடங்கள் ;

(ஐ) நீராடும் நிமித்தம் யாத்திரிகள் பயன்படுத்தும் குளங்கள், கிணறுகள், நீர் நிலைகள் மற்றும் அதுபோன்ற வசதிகளை அளிக்கும் வேறு இடங்கள்;

(ஒ) நீர் அருந்துதல் நிமித்தம் நீரைப் பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்தும் குளங்கள், கிணறுகள், நீர் நிலைகள் மற்றும் அதுபோன்ற வசதிகளை அளிக்கும் வேறு இடங்கள் ;

8. நோய்கள் பரவாமற் தடுக்கும் பொருட்டு வாடிப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஏதேனும் குளம் கிணறு நீர்ச்சுனை அல்லது நீர்த்தேக்கம் என்பவற்றில் குளோரின் இடுவதற்கு, அல்லது ஏதாவதொரு குளத்தினை, கிணற்றை, நீர் நிலையை மூடிவிடுவதற்கு அவசியமென மாவட்டச் செயலாளர் அல்லது வைத்திய அதிகாரி கருதும் பட்சத்தில் அவ்வாறு செய்வதற்கு தத்துவமுடையவராதல் வேண்டும்.

9. (1) 7 ஆவது ஒழுங்கு விதியின் கீழ் குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட இடமொன்றில் மாவட்டச் செயலாளரினால்/அரசாங்க அதிபர் அதன் சார்பாக வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தின் அதிகாரத்துடன் அன்றியும் அத்தகைய அனுமதிப் பத்திரத்தின் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அன்றியும் ஆள் எவரும் வழங்கப்பட்டுள்ள வாடிப் பிரதேசத்துக்குள் எந்தவொரு நோக்கத்திற்காகவும் ஏதேனும் ஒரு சாவடியை அல்லது தற்காலிக அல்லது நிரந்தர கட்டடமொன்றினை அல்லது வேறு அமைவிடத்தை அமைத்தல் அல்லது தற்போதுள்ள கட்டடமொன்றுக்கு அல்லது வேறு அமைவிடத்திற்கு புதிதாக பகுதியொன்றினை இணைத்தல் ஆகாது.

(2) ஒழுங்கு விதியின் 1 ஆவது பந்திக்கு முரணான வகையில் இத்தகைய சாவடியொன்றினை அல்லது தற்காலிக அல்லது நிரந்தர கட்டடமொன்றினை அல்லது வேறு அமைவிடமொன்றினை அமைத்தல் அல்லது தற்போதுள்ள கட்டிடத்திற்கு அல்லது அமைவிடத்திற்கு புதிதாக ஒரு பகுதியை சேர்த்தால் அந் நபருக்கு எழுத்து மூல அறிவித்தல் ஒன்றினை வழங்கிய பின் அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் படி குறிப்பிட்ட காலப்பகுதியில் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் அத்தகைய சாவடியை அல்லது கட்டடத்தினை தற்போதுள்ள கட்டடத்திற்கு அல்லது அமைவிடத்திற்கு புதிதாக சேர்க்கப்பட்ட பகுதியை அப்புறப்படுத்துமாறு அல்லது அழிக்குமாறு மாவட்ட செயலாளரினால் அந் நபருக்கு உத்தரவிடுதல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) இவ் ஒழுங்கு விதியின் 2 ஆம் பந்தியின் கீழ் அறிவித்தலொன்றினைப் பெற்றுக் கொண்ட நபர் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அவ்வறிவித்தலில் உள்ள உத்தரவுகளுக்கமைய இணங்கியொழுகத் தவறும்பட்சத்தில் அல்லது அதுபற்றிய சந்தேகம் எழும் பட்சத்தில், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அத்தகைய சாவடியினை அல்லது அமைவிடத்திற்கு புதிதாக சேர்க்கப்பட்ட பகுதியினை

அப்புறப்படுத்துதல் அழித்தல் மாவட்ட செயலாளரினால் சட்டமுறையாதல் வேண்டும் என்பதுடன் அதனை அப்புறப்படுத்தல் அல்லது உடைத்தல் என்பவற்றிற்கு தேவையான கூலியாட்கள், உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் சகிதம் குறிப்பிட்ட இடத்திற்கு அல்லது நிலத்திற்கு மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர் உட்செல்லுதல், அப்புறப்படுத்தல் அல்லது அழித்தல் என்பவற்றிற்கு தேவையான அனைத்து செயல்களுக்கும் அல்லது அதற்கு அவசியமாகக் கூடியவாறான நடவடிக்கைகளைச் செய்வதும் அல்லது செய்விப்பதும் சட்டமுறையாதல் வேண்டும்.

10. குறிப்பிட்ட மலசலகூடத்தில் அல்லது மலசலகூடத்திற்கு அண்மையில் அறிவித்தல் அல்லது பெயர்ப்பலகை ஒன்றின் மூலம் மாவட்டச் செயலாளரினால் / அரசாங்க அதிபர் யாத்திரிகைகளின் பாவனைக்காக ஒதுக்கப்பட்ட மலசலகூடத்தை தவிர வாடிப் பிரதேசத்துக்குள் ஆள் எவரும் மலசலம் கழித்தலாகாது.

11. வாடிப் பிரதேசத்திற்குள் குறிப்பிட்ட குளத்தில், கிணற்றில், நீர்த்தேக்கத்தில், நீரோடையில் உள்ள நீரை எவரேனும் அசுத்தப்படுத்தல் ஆகாது.

12. குப்பை கூளங்களை போடுவதற்காக மாவட்டச் செயலாளரி னால்/ அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்டுள்ள இடம் அல்லது தொட்டி தவிர ஆள் எவரும் வாடிப் பிரதேசத்திற்குள் பொருட்கள் அல்லது குப்பை கூழங்கள் போடுதல் ஆகாது.

13. (1) வாடிப் பிரதேசத்திற்குள் யாத்திரிகளுக்கான அனைத்து உணவு, பான வகைகளைப் பகிர்ந்தளிப்பதற்கான ஒழுங்கு முறைகளை ஏற்படுத்துவதற்கு மாவட்டச் செயலாளர் தத்துவமுடைய வராதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்கு விதியின் பந்தி (1) இன் கீழ் தனக்குரித் தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரயோகத்தின் போது, மாவட்டச் செயலாளரினால்/ அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய எந்தவொரு பொலிஸ் அதிகாரியினால் அல்லது பொது சுகாதார பரிசோதகரால் வழங்கப்படும் சட்ட முறையான கட்டளை எதனையும் ஆள் எவரும் மீறுதல் ஆகாது.

14. (1) வாடிப் பிரதேசத்திற்குள் விற்பனைக்கோ அல்லது வேறு வகையிலோ காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் அல்லது வைக்கப் பட்டிருக்கும் உணவு அல்லது பானம், சுகாதாரம் அற்றது என அல்லது பாவனைக்கு உதவாதது என தென்படும் சந்தர்ப்பத்தில் மாவட்டச் செயலாளாரினால் அல்லது வைத்திய அதிகாரியினால் அல்லது பொது சுகாதார பரிசோதகரால் அத்தகைய உணவு பாவனைக்கு உகந்தவையல்ல என தெரியப்படுத்தலாம்.

(2) இவ்வொழுங்கு விதியின் (1) ஆவது பந்தியின் கீழ் பாவனைக்கு உகந்தவையல்ல என தெரியப்படுத்தப்பட்டிருக்கும் ஏதேனும் உணவு அல்லது பானம் ஆள் எவரும் வாடிப் பிரதேசத்திற்குள் விற்பனை செய்தலாகாது.

(3) இவ்வொழுங்கு விதியின் (1) ஆவது பந்தியின் கீழ் பாவனைக்கு உகந்தவையல்ல என தெரியப்படுத்தப்பட்டிருக்கும் ஏதேனும் உணவு அல்லது பானம் எந்தவொரு பொலிஸ் அதிகாரி அல்லது பொது சுகாதார பரிசோதகரினால் கைப்பற்றப்பட்டு அழித்துவிடல் சட்டமுறையாதல் வேண்டும்.

15. மாவட்டச் செயலாளரினால்/அரசாங்க அதிபரினால் அதன் சார்பாக வழங்கப்படும் உரிமமொன்றின் அதிகாரத்துடனன்றியும் அத்தகைய உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்குதலன்றியும் வாடிப் பிரதேசத்தினுள் 7 ஆம் பந்தி ஒழுங்குவிதியின் கீழ் அந்த நோக்கத்திற்கென ஒதுக்கப்பட்ட ஏதேனும் இடத்தில் ஆள் எவரும் வெதுப்பகம், சிற்றுண்டிச்சாலை அல்லது உணவு தயாரிக்கும் இடம், உணவு விடுதி, தானசாலை நிறுவுதலோ அல்லது நடத்துதலோ ஆகாது. ஒவ்வொரு உரிமமும் வைத்திய அதிகாரியின் அல்லது அத்தகைய மருத்துவ அலுவலரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலரின் விதிப்புரையின் கீழ் கட்டணம் எதுவுமின்றி விநியோகிக்கப்படல் வேண்டும்.

16. வாடிப் பிரதேசத்திற்குள் உள்ள சகல பாண்சாலைகளும், சிற்றுண்டிச்சாலைகள், உணவு தயாரிக்கும் இடங்கள், உணவு விடுதி மற்றும் தானசாலை மற்றும் அங்குள்ள அனைத்து தளபாடங்கள், உபகரணங்கள் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருத்தல் வேண்டும்.

17. வாடிப் பிரதேசத்திற்குள் விற்பனைக்கோ அல்லது வேறு காரணத்திற்காகவோ காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் அல்லது வைக்கப்பட்ருக்கும் அனைத்து கேக் வகைகள், இனிப்புப் பண்டங்கள் மற்றும் சமைத்த உணவு வகைகள் வைத்திய அதிகாரியினால் அல்லது பொது சுகாதார பரிசோதகரால் திருப்திப்படும் வகையில் ஈக்கள் உட்புகாத வகையில் சரியான முறையில் கண்ணாடி காப்பகத்தினுள் வைத்தல் வேண்டும்.

18. தேநீர், கோப்பி, பால் அல்லது ஏதாவது உணவு வகை அல்லது பானம் என்பவற்றின் கழிவுகளையோ, சமையல் செய்யும் போது எஞ்சும் கழிவுகளையோ, வேறு கழிவுப் பொருட்களையோ, தரையில் அல்லது நிலத்தில் எறிதல் ஆகாது. அத்தகைய கழிவுப் பொருட்கள் எல்லாம் 19 ஆவது ஒழுங்கு விதியின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறான ஏதேனும் கொள்கலன் ஒன்றில் இடப்படுதல் வேண்டும். அத்துடன் கழிவுப் பொருட்கள் மீதியாகவிருக்கும் பால் அல்லது அகற்றப்படும் பொருட்கள் எவையேனும் வாடிப் பிரதேசத்தினுள் அல்லது அண்மையிலிருக்கும் நிலத்தில் வீசியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவ்விடத்தின் சொந்தக்காரரினால் அல்லது பிரதான குடியிருப்பாளரினால் அவ்விடத்தில் வெதுப்பகம், சிற்றுண்டிச்சாலை, உணவு தயாரிக்கும் இடம், உணவு விடுதி அல்லது தானசாலை என்பவற்றில் ஒன்றாக இருக்குமிடத்து உரிமம் பெற்றவர் மூலம் அத்தகைய தவறு நீடிப்பதை தடுப்பதற்கு உரிய விழிப்புக் கவனத்துடன் செயலாற்றினாரெனவும் எல்லா முற்காப்பும் எடுத்தாரெனவும் மற்றும் எண்பித்தலான்றி இவ்வொழுங்கு விதியின் ஏற்பாடுகளை மீறியுள்ளார்களெனக் கருதப்படுதல் வேண்டும்.

19. வாடிப் பிரதேசத்திற்குள் ஏதேனும் வர்த்தக நோக்கத் திற்காகவோ வியாபார நோக்கத்திற்காகவோ பயன்படும் சகல வெதுப்பகங்கள், சிற்றுண்டிச்சாலைகள் உணவு தயாரிக்குமிடங்கள், உணவுச் சாலைகள், உணவு தானசாலைகள் என்பவற்றிலும் ஒவ்வொரு கட்டிடத்திலும் அல்லது மனையிலும் 112 கன மீற்றருக்குக் (4 1/2 கன அடி) குறையாத கனமானமுள்ள மரத்தாலான அல்லது உலோகத்தாலான கழிவுத் தொட்டி ஒன்று வழங்கப்பட வேண்டியதோடு அந்தக் கழிவுத் தொட்டி அதில் கழிவுகளை போடும் அல்லது அதிலிருந்து கழிவுகளை அகற்றும் போது தவிர எந்நேரங்களிலும் மரத்தாலான அல்லது உலோகத்தாலான மூடியினால் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

20. (1) வாடிப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள 15 ஆவது, 16 ஆவது, 17 ஆவது, 18 ஆவது அல்லது 19 ஆவது ஒழுங்கு விதிகளை மீறும் வகையில் நிறுவப்பட்டுள்ளதாக அல்லது நடத்திச் செல்லப்படுவதாக மாவட்டச் செயலாளர் கருதும் ஏனேும் ஒரு பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை, உணவு தயாரிக்கும் இடம், உணவு சாலை அல்லது தானசாலை அல்லது வியாபார ஸ்தலம் என்பதனை மூடிவிடுவதற்கும் அத்தகைய வளவு தொடர்பில் உரிமம்

வழங்கப்பட்டிருந்தால் அந்த உரிமத்தை உடனடியாக ரத்து செய்வதற்கு மாவட்டச் செயலாளர் தத்துவமுடையவராதல் வேண்டும்.

(2) ஏதேனும் ஒரு பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை, அல்லது உணவு தயாரிக்கும் இடம், உணவு சாலை அல்லது தானசாலை அல்லது ஏதேனும் வியாபார நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள எவரேனும் ஒருவர் இவ் வொழுங்கு விதியின் 1 ஆம் பந்தியின் கீழ் மாவட்டச் செயலாளரினால்/அரசாங்க அதிபரினால் ஆக்கப்படும் எந்தவொரு சட்டமுறையான கட்டளைக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

21. ஏதேனும் தொற்றுநோயினால் அல்லது தொடுகை நோயினால் பீடிக்கப்பட்டுள்ள ஆள் எவரேனும் வாடிப் பிரதேசத்திற்குள் பிரவேசித்தல் ஆகாது.

22. (1) வாடிப் பிரதேசத்திற்குள் ஆள் எவரும் கொள்ளை நோய் பரவும் பொழுது மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர் யாத்திரிகர்களை வாடிப் பிரதேசத்திலிருந்து உடனடியாக வெளியேறுமாறு உத்தரவிடுவதற்கும் வெளியேறி செல்வதற்காக விதந்துரைத்தலும் சட்டமுறையாதல் வேண்டும்.

(2) மாவட்டச் செயலாளரினால்/ அரசாங்க அதிபரினால் இப்பிரிவின் 1 ஆம் பந்தியின் கீழ்ஆக்கப்படும் சட்டமுறையான கட்டளை எதையும் எவரும் மீறுதல் ஆகாது.

23. வாடிப் பிரதேசத்திற்குள் ஏதேனும் தொற்று நோய் அல்லது தொடுகை நோயினால் பீடிக்கப்பட்ட ஆள் எவரும் தொற்றுநோய் அல்லது தொடுகை நோய் பீடித்துள்ளது பற்றி தெரிந்து கொண்டும் அவருடன் ஒன்றாக வசித்தால் ஆள் ஒவ்வொருவரும் அதனை வைத்திய அதிகாரிக்கு அல்லது பொது சுகாதார அலுவலருக்கு அல்லது ஏதேனும் பொலிஸ் அதிகாரிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

24. வாடிப் பிரதேசத்தினுள் ஏதேனும் பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை அல்லது உணவு தயாரிக்கும் இடம், உணவு விடுதி என்பவற்றில் பொறுப்பாளியாக உள்ள ஒருவர் விடயத்திற்கு ஏற்ப அந்தப் பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை அல்லது உணவு தயாரிக்கும் இடம், உணவு விடுதி, தானசாலை எதுவாயினும் அதனுள் தொற்றுநோய் அல்லது தொடுகை நோயினால் பீடிக்கப்பட்டிருப்பவரெனக் கருதப்படும் எந்த ஒருவருக்கும் வாடிப் பிரதேசத்திற்குள் பிரவேசிக்கவோ ஏதாவது பொருட்கள் அல்லது உணவு, பான வகைகள் விற்பதில், தயாரிப்பதில், விநியோகிப்பதில் பங்குபற்ற அனுமதித்தல் ஆகாது.

25. ஏதேனும் பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை, உணவு தயாரிக்கும் இடம், உணவு சாலை அல்லது தானசாலை என்பவற்றின் உரிமம் பெற்றவர் அல்லது ஏதாவதொரு தங்குமிடத்தில் அல்லது யாத்திரிகளின் ஓய்வு விடுதியின் உரிமையாளர் அல்லது தலைமை வதிவாளரினால் இந்த இடங்களில் தொற்றுநோய் அல்லது தொடுகை நோயினால் பீடிக்கப்பட்ட எவரும் இருப்பதாகக் காணும் பட்சத்தில் தொற்றுநோயினாலோ, தொழுநோயினாலோ பீடிக்கப்பட்ட எவரையும் விடயத்திற்கேற்ப சொல்லப்பட்ட பாண்சாலை, சிற்றுண்டிச்சாலை, உணவு தயாரிக்கும் இடத்தில், உணவு சாலையில் தானசாலையின் தங்குமிடம் யாத்திரிகர்களின் ஓய்வு விடுதி என்பவற்றில் எந்தளவு காலப்பகுதியாயினும் தங்கியிருப்பதற்கு அனுமதித்தல் ஆகாது. அத்தகைய ஏதேனும் வளவில் தொற்றுநோய் அல்லது தொழுநோய் கண்டுபிடிக்கப்படும்போது விடயத்திற்கேற்ப உரிமம் பெற்றவர் அல்லது உரிமையாளர் அல்லது பிரதான குடியிருப்பாளர் இந்த விடயத்தைப் பற்றி வைத்திய அதிகாரிக்கு அல்லது பொது சுகாதார பரீட்சகருக்கு அல்லது ஏதேனும் பொலிஸ் அதிகாரிக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

26. ஏழாம் ஒழுங்குவிதியின் கீழ் யாசகம் செய்தல் மற்றும் தானம் கொடுத்தல் என்பவற்றிற்கு ஒதுக்கப்பட்டுள்ள அல்லது வழங்கப்பட்டுள்ள ஏதாவதொரு இடத்தில் பணமாகவோ வேறு வகையாகவோ ஆள் எவரும் வாடிப் பிரதேசத்துள் தானம் வழங்குதலோ விநியோகித்தலோ ஆகாது.

27. மாவட்டச் செயலாளரினால்/அரசாங்க அதிபரினால் எழுத்து மூல அனுமதியின்றி ஆள் எவரும் வாடிப் பிரதேசத்திற்குள் வான வெடிகளைக் கொழுத்துதல் அல்லது தீ ஆயுதம் பயன்படுத்தல் என்பவற்றை மேற்கொள்ளலா காது.

28. 7 ஆவது ஒழுங்கு விதி அல்லது 10 ஆவது ஒழுங்கு விதியின் கீழ் ஏதாவது ஒரு இடத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் ஏதாவது அறிவிப்பு அல்லது பெயர்ப்பலகை எந்தவொருவராலும் தகாத வகையில் மாற்றவோ அல்லது நீக்கவோ இயலாது.

29. மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர் வைத்திய அதிகாரி பொது சுகாதார பரிசோதகர் அல்லது எவரேனும் ஒரு பொலிஸ் அதிகாரியினால் பின்வருவனற்றைச் செய்தல் சட்டமுறை ஆகுதல் வேண்டும்.

(அ) இம் முற்போந்த ஒழுங்கு விதிகள் எதனையும் நடைமுறைப் படுத்துவதற்காக வாடிப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள ஏதேனும் காணியினுள் அல்லது வளவுக்குள் உட்செல்லுதல் மற்றும்

(ஆ) 7 ஆவது ஒழுங்குவிதியின் கீழ் ஏதாவதொரு அறிவிப்பு அல்லது பெயர்ப்பலகை காட்சிக்கு வைப்பதற்காக வாடிப் பிரதேசத்திற்குள் ஏதேனும் ஒரு காணியின் மீது அல்லது வளவின் மீது ஏதாவதொரு தூணை அமைத்தல் அல்லது கட்டுதல் சட்டமுறையாகும்.

30. பொது மக்களின் நன்மையை முன்னிட்டு அல்லது இரத்துச் செய்தல் உசிதமானது என கருதும் பட்சத்தில் மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர் பின்வருவனவற்றை இரத்துச் செய்தல் சட்டரீதியாக்கப்பட்டுள்ளது-

(அ) 6 ஆவது அல்லது 27 ஆவது ஒழுங்குவிதியின் கீழ் தம்மால் வழங்கப்பட்ட ஏதாவதொரு அனுமதி;

(ஆ) 9 ஆவது ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்படுகின்ற உரிமம்;

(இ) 15 ஆவது ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்படுகின்ற ஏதாவதொரு உரிமம்

**அட்டவணை**

3. மாத்தறை மாவட்டத்தின், மாத்தறை செயலகப் பிரிவின் வெஹெரஹேன 426/B கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குரிய வெஹெரஹேன பூர்வாராம புரான ரஜமகா விகாரையில் அமைந்துள்ள நிலப்பரப்பாகும்.

வடக்கு : தவ்லகல சங்கரத்ன மாவத்தை;
தெற்கு : ஓய்வு விடுதி அமைந்துள்ள காணி தேக்ககஹ கொரட்டுவ ;
கிழக்கு : வெலிபிட்டனிய கும்புர மற்றும் திவுல்கஹகொரட்டுவ ;
மேற்கு : கங்கஹேன காணியின் எல்லையைக் கொண்டது.

12-298

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் (PQ 116) பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கங்கள் : 609969 – குருப்பு ஆராச்சிகே சுனில் ஜயதிஸ்ஸ

2014, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்று நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டமொன்றில் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சி பணிப் பாளர்கள் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றிய தீர்மானமாவது :-

''கடன் எடுத்த குருப்பு ஆராச்சிகே சுனில் ஜயதிஸ்ஸ கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு சே. ஆர். கமகேயின் 2003.10.10 ஆந் திகதியுடைய ஈட்டு முறி 2280 ஆம் இலக்கம் மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும், அத்துடன் மேற்படி முறி பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு 2014.09.04 ஆந் திகதி வரை 83.22,739.92 தற்சமயமாக வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்புச் சட்டத்தின்படி மேற்கூறிய ஈட்டு முறி இலக்கம் 2280 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள கூட்டாட்சி ஆதனம் மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 83.22,739.92 உடனும் மேலும் ரூபா 46,20,622.44 பணத்தொகைக்கு 2014.09.05 ஆந் திகதி முதல் ஏலத் திகதிவரை ஆண்டொன்றிற்கு 15% வட்டியுடனும் விளம்பரச் செலவுகளும் வேறு கொடுப்பனவுகளும் சேர்த்து அறவிடுவதற் காக கொழும்பு 12 புதுக்கடை வீதி, இலக்கம் 182, 3 ஆவது மாடியில் அமைந்துள்ள ஏலதாரர்கள் திரிவிண்கா அன்ட் சேனநாயக்க உத்தரவு பெற்ற ஏலதாரர் எல்.பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.''.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பல்லேபத்து சல்பிட்டி கோரளையில் கொழும்பு மாநகர சபை எல்லையில் கொழும்பு 2, வாட் இலக்கம் 24 (சுதுவெல்ல) ஹயிட் பார்க் கோணர் இல் அமைந்துள்ள கொழும்பு 02, ஹைட்பார்க் கோணர் இலக்கம் 79-4/3 மாடிவீடுக்கு நிலஅளவையாளர் கே. பி. சந்திரசேகர 2003.01.04 ஆந் திகதியுடைய கூட்டாட்சி வரைபட இலக்கம் 1352 இல் காண்பிக்கப்பட்ட நான்காவது மாடியில் அமைந்துள்ளது. இக்கூட்டாட்சி யுனிட் 01A/F4/47 என்ற கூட்டாட்சி தொகுதி வசிக்கும் அறை சாப்பாட்டு அறை, மூன்று படுக்கை அறைகள், சமையலறை ஸ்டோர், மூன்று கழிவறைகள், இரண்டு பல்கனி கொண்டுள்ள இந்த கூட்டாட்சி யுனிட் தொகுதி 01A/F4/47 நான்காவது மாடி மேற்படி சொல்லப்பட்ட கூட்டாட்சி வரைபடம் இல. 1352 இல் பின்வருமாறு எல்லைகளைக் கொண்டது – வடக்கு : இந்த தொகுதியைப் பிரிக்கும் சுவர் மற்றும் பொது வசதிகளான ICEI யில் இடைவெளி ; கிழக்கு : இந்த தொகுதியைப் பிரிக்கும் சுவர் மற்றும் பொது வசதிகளான ICEI யில் இடைவெளி ; தெற்கு : யுனிட் 01A/F4/47 பிரிக்கும் மத்தியில் உள்ள சுவர் மற்றும் பொது வசதிகளான ICE7 பிரிக்கும் சுவர் யுனிட் 01A/F4/47 பிரிக்கும் இந்த யுனிட் மத்திய சுவர் ; மேற்கு : பொது வசதிகளான ICEI பிரிக்கும் இந்த யுனிட் சுவர் யுனிட் 01A/F4/47 பிரிக்கும் இந்த மத்திய சுவர் மற்றும் இந்த யுனிட் பொது வசதிகளான ICE3 இடையில உள்ள சுவர் ; மேல் தொகுதி : இந்த யுனிட் மற்றும் யுனிட் 01A/F5/47 பிரிக்கும் மத்திய கொங்கிரீட் தட்டு ; கீழ்த்தொகுதி: இந்த யுனிட் மற்றும் யுனிட் 01A/F3/47 பிரிக்கும் மத்திய கொங்கிரீட் தட்டு மற்றும் இந்தத் தொகுதியின் விஸ்தீரணம் 17124.6 சதுர மீட்டர் (1887.516சதுர அடி)

மேல்தொகுதி : இந்த யுனிட் மற்றும் யுனிட் 01A/F5/47 பிரிக்கும் மத்திய கொங்கிரீட் தட்டு ; கீழ்தொகுதி : இந்த யுனிட் மற்றும் யுனிட் 171.246 01A/F3/47 பிரிக்கும் மத்திய கொங்கிரீட் தட்டு மற்றும் இந்த தொகுதியின் விஸ்தீரணம் 171.246 சதுர மீட்டர் (1887.516 சதுர அடி) இந்த யுனிட் வசிக்கும் அறை, சாப்பாட்டு அறை, மூன்று படுக்கை அறைகள், சமையலறை, களஞ்சிய அறை, 3 கழிவறைகள் மற்றும் இரண்டு பல்கனிகளைக் கொண்டது. இந்த யுனிட் பொது வசதிகள் 1.117%. பாகம்.

இந்த யுனிட் பொதுவசதிகள் ICE 13.

இந்த யுனிட் கட்டிடம் A பகுதிபடுத்திய யுனிட் மற்றும் உடன் தேவையான யுனிட் 1A/F4/G/A59 சேர்த்து. இக்காணி கொழும்பு காணிப்ப திவகத்தில் கூட்டாட்சி A105/139 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பொது வசதிகள்**

சட்ட பொது வசதிகள் கூட்டாட்சியின் தொகுதியின் பிரிவு 2 ஆம் சட்டம் 11 – 1973 மற்றும் 1982 ஆம் ஆண்டின் சட்டம் A 5 ஆம் பிரிவின் 12 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

(அ) இந்தக் காணியில் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் திறந்த வெளி இந்தக் கூட்டாட்சி ஆதனத்திற்கு உரித்தானது;

(ஆ) கட்டிடம் அத்திவாரம் தூண்கள் பீம்ஸ் பிரதான சுவர்கள் கட்டிடத்தின் கூரை ;

(இ) மின்சாரம் தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி நீர்த்தாங்கிகள் பம்ப் மற்றும் தேவையான பொது இணைப்புக்கள் ;

(ஈ) மற்றைய அனைத்து பொது வசதிகள் மற்றும் தீயணைக்கும் இயந்திரங்கள் இரண்டு லிப்ட் பொது சுகாதார வசதிகள் மற்றும் காற்றோட்ட வசதிகள், பாதுகாப்பு கட்டமைப்பு CCTV கமரா;

(உ) பொதுவாக இந்த கூட்டாட்சி தொகுதியில் பாவிக்கும் எல்லா பொது வசதிகள் ;

பொது வசதிகள் கூட்டாட்சி வரைபடத்தில் பொதுவாக விபரிக்கப்பட்டுள்ளது.

ICE 1(அ) இந்தக் காணி மற்றும் திறந்த வெளி கட்டிடத்தை சுற்றியுள்ள மற்றும் கட்டிடத்திற்குச் செல்லும் வசதியாகும்;

(ஆ) காற்றோட்டத்திற்கான திறந்த வெளி ;

(இ) பொதுவாக எல்லா யுனிட்டுக்கும் பாவிக்கும் காணியின் வசதிகள்;

(ஈ) இந்தக் கட்டிடத்தின் வெளியில் அமைந்துள்ள தேவையானவைகள்.

ICE 2 இது ஒரு திறந்தவெளி காற்றுக்காக இது முதலாவது மாடியில் இருந்து பதினோராவது மாடி மட்டும்;

ICE 3 இது ஒரு திறந்தவெளி காற்றுக்காக - இது முதலாவது மாடியில் இருந்து பதினோராவது மாடி மட்டும்;

ICE 4 இது ஒரு திறந்தவெளி காற்றுக்காக - இது முதலாவது மாடியில் இருந்து பதினோராவது மாடி மட்டும்;

ICE 5 இது ஒரு திறந்தவெளி காற்றுக்காக - இது முதலாவது மாடியில் இருந்து பதினோராவது மாடி மட்டும்;

ICE 6 பொதுவாகப் பாவிக்கும் மெக்கானிக்கல் மற்றும் பிளம்பிங் டக்ட்

ICE 7 பொதுவாகப் பாவிக்கும் மெக்கானிக்கல் மற்றும் பிளம்பிங் டக்ட்

ICE 8 பொதுவாகப் பாவிக்கும் மெக்கானிக்கல் மற்றும் பிளம்பிங் டக்ட்

ICE 9 இ.து ஒரு பசேஜ் ஜெனிட்டர் ரூம் லிப்ட் டக்ட் காபேஜ் ரூம் குறைந்த வோல்டேஜ் டக்ட் லோஜ் லொபி பாதுகாவலர் அறை டிரான்ஸ்போமர் அறை CEB மீட்டர் ரூம் எலக்றிகல் பனல் ரூம் வரவேற்பறை காஸ் சிலிண்டர் ரூம் வாகனங்கள் செல்லும் இடம் . இது பொதுவாக பாவிக்கும் கீழ்த்தட்டு தொகுதி.

ICE 10 இது ஒரு பசேஜ், ஜெனிட்டர் ரூம், லிப்ட் சேவை, காபேஜ் ரூம், குறைந்த வோல்டேஜ் டக்ட் திறந்த வெளி இது ஒரு பொதுவாக பாவிக்கும் முதலாவது மாடித் தொகுதி.

ICE 11 இது ஒரு பசேஜ், ஜெனிட்டர் ரூம், லிப்ட் சேவை, காபேஜ் ரூம், குறைந்த வோல்டேஜ் டக்ட் லோஜ் லொபி திறந்த வெளி இது, ஒரு பொதுவாக பாவிக்கும் இரண்டாவது மாடித் தொகுதி.

ICE 12 இது ஒரு பசேஜ், ஜெனிட்டர் ரூம், லிப்ட் சேவை, காபேஜ் ரூம், குறைந்த வோல்டேஜ் டக்ட் லோஜ் லொபி திறந்த வெளி இது, ஒரு பொதுவாக பாவிக்கும் மூன்றாவது மாடித் தொகுதி.

ICE 13 இது ஒரு பசேஜ், ஜெனிட்டர் ரூம், லிப்ட் சேவை, காபேஜ் ரூம், குறைந்த வோல்டேஜ் டக்ட் லோஜ் லொபி திறந்த வெளி இது, ஒரு பொதுவாக பாவிக்கும் நான்காவது மாடித் தொகுதி.

ICE 14 இது ஒரு பசேஜ், ஜெனிட்டர் ரூம், லிப்ட் சேவை, காபேஜ் ரூம், குறைந்த வோல்டேஜ் டக்ட் லோஜ் லொபி திறந்த வெளி இது, ஒரு பொதுவாக பாவிக்கும் ஐந்தாவது மாடித் தொகுதி.

ICE 15 இது ஒரு பசேஜ், ஜெனிட்டர் ரூம், லிப்ட் சேவை, காபேஜ் ரூம், குறைந்த வோல்டேஜ் டக்ட் லோஜ் லொபி திறந்த வெளி இது, ஒரு பொதுவாக பாவிக்கும் இரண்டாவது மாடித் தொகுதி.

ICE 16 இது ஒரு பசேஜ், ஜெனிட்டர் ரூம், லிப்ட் சேவை, காபேஜ் ரூம், குறைந்த வோல்டேஜ் டக்ட் லோஜ் லொபி திறந்த வெளி இது, ஒரு பொதுவாக பாவிக்கும் ஏழாவது மாடித் தொகுதி.

ICE 17 இது ஒரு பசேஜ், ஜெனிட்டர் ரூம், லிப்ட் சேவை, காபேஜ் ரூம், குறைந்த வோல்டேஜ் டக்ட் லோஜ் லொபி திறந்த வெளி இது, ஒரு பொதுவாக பாவிக்கும் எட்டாவது மாடித் தொகுதி.

ICE 18 இது ஒரு பசேஜ், ஜெனிட்டர் ரூம், லிப்ட் சேவை, காபேஜ் ரூம், குறைந்த வோல்டேஜ் டக்ட் லோஜ் லொபி திறந்த வெளி இது, ஒரு பொதுவாக பாவிக்கும் ஒன்பதாவது மாடித் தொகுதி.

ICE 19 இது ஒரு பசேஜ், ஜெனிட்டர் ரூம், லிப்ட் சேவை, காபேஜ் ரூம், குறைந்த வோல்டேஜ் டக்ட் லோஜ் லொபி திறந்த வெளி இது, ஒரு பொதுவாக பாவிக்கும் பத்தாவது மாடித் தொகுதி.

ICE 20 இது ஒரு பசேஜ், ஜெனிட்டர் ரூம், லிப்ட் சேவை, காபேஜ் ரூம், குறைந்த வோல்டேஜ் டக்ட் லோஜ் லொபி திறந்த வெளி இது, பொதுவாக பாவிக்கும் பதினோராவது மாடித் தொகுதி.

ICE 21 இது ஒரு ஜெனரேட்டர் ரூம் மோட்டார் ரூம், குறுங் டவர் ஸ்டோர்ஸ் படிதட்டு திறந்த வெளி ரூப் டொப் பொதுப் பாவனைக்கு.

ICE 22 லிப்ட் லொபி பயர் லிப்ட் எலக்கிடிகல் டக்ட் வாகனங்கள் செலுத்திமிடம் பம்ப் ரூம் செக்டறி ரூம் ஜெனிட்டர் ரூம் கழிவறை. இது பேமண்ட் பொது பாவனை

ICE 23 லொபி லிப்ட் பயர் லிப்ட் எலக்றிகல் டக்ட், வாகனங்கள் செலுத்துவதற்கு பம்ப் ரூம் ஜெனரேட்டர் ரூம் நீச்சல் தடாகம், ரெஸ்ட்ரூடண்ட் ஸ்டோர்ஸ் பாவனை கழிவறை மெசயின் மாடி பொதுப் பாவனைக்கு.

(திருமதி) ரஞ்சனி கமகே,
கம்பனிச் செயலாளர்.

12-436

---

## திருத்தம்

### பேன் ஏசியா வங்கி ப. வ. க. - வென்னப்புவை கிளை

2014.11.14 ஆந் திகதிய 1889 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை பகுதி I: தொகுதி I இல் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தல் இல. 11-421 ஐக் கொண்ட மேலே குறிப்பிடப்பட்டுள்ள தலையங்கத்தின் கீழுள்ள அட்டவணையின் 7 ஆம் வரியிலும் 13 ஆம் வரியிலும் குறிப்பிடப்பட்டுள்ள "துண்டு 2" என்பது "துண்டு 1" எனத் திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

முகாமையாளர்.
(அறவீடுகள்).

12-453

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.